20.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணை இன்று திறப்பு



நடப்பு நீர்ப் பாசன ஆண்டில் சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து செவ்வாய்க்கிழமை (செப்.20) காலை 8 மணிக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. நிகழாண்டில் மேட்டூர் அணையின் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாத காரணத்தால், மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12ஆம் தேதி காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. உச்ச நீதிமன்ற உத்தரவையடுத்து, கர்நாடகம் தமிழகத்துக்கு காவிரி நீரைத் திறந்துவிட்டதால் அணையின் நீர்மட்டம் 87 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு போதுமானதாக இல்லாவிட்டாலும், பருவ மழை கைகொடுக்கும் என்ற நம்பிக்கையோடு செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு மேட்டூர் அணையிலிருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

மேட்டூர் அணையின் மேல்மட்ட மதகுகள் வழியாக துவக்கத்தில் நொடிக்கு 5 ஆயிரம் கன அடி வீதம் திறக்கப்படும் நீரின் அளவு, பின்னர் படிப்படியாக அதிகரிக்கப்படும். பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டால் மேட்டூர் அணை மின் நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும், சுரங்க மின் நிலையம் வழியாக 200 மெகாவாட் மின்சாரமும், 5 கதவணைகள் மூலம் 150 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படும்.

தமிழகப் பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, தமிழக மின்வாரியத் துறை அமைச்சர் தங்கமணி, சமூக நலத் துறை அமைச்சர் சரோஜா, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கருப்பண்ணன், போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர், பொதுப் பணித் துறை திருச்சி மண்டல தலைமை பொறியாளர் முருகேசன், மேட்டூர் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.செம்மலை உள்ளிட்டோர் இந் நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

மேட்டூர் அணையின் 83 ஆண்டு கால வரலாற்றில் 15 ஆண்டுகள் மட்டுமே குறிப்பிட்ட நாளான ஜூன் 12ஆம் தேதி காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஜூன் 12-இல் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்ட ஆண்டுகள்: 1934-35, 1935-36, 1939-40, 1965-66, 1979-80, 1980-81, 1984-85, 1992-93, 1993-94, 1994-95, 1997-98, 2000-2001, 2001-2002, 2006-2007 மற்றும் 2008-2009.

மேட்டூர் அணையின் நீர் இருப்பும் வரத்தும் திருப்திகரமாக இருந்ததால் 11 ஆண்டுகள் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று ஜூன் 12-க்கு முன்பாகவே தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஜூன் 12-க்கு முன்பாகவே தண்ணீர் திறக்கப்பட்ட ஆண்டுகள்: 1936-37, 1937-38, 1938-39, 1940-41, 1941-42, 1942-43, 1943-44, 1944-45, 1945-46, 1947-48 மற்றும் 2011-2012.

அணையின் நீர்வரத்து10 ஆயிரம் கன அடியாகச் சரிவு

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நொடிக்கு 10 ஆயிரம் கன அடியாகச் சரிந்துள்ளது.

உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி கர்நாடகம் தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விட்டது. ஆனால், குறிப்பிட்ட அளவு காவிரி நீரைத் திறக்காமல்

படிப்படியாகக் குறைத்து வருவதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாகச் சரிந்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 10,857 கனஅடி வீதம் வந்துகொண்டிருந்த நீர்வரத்து, திங்கள்கிழமை காலை நொடிக்கு 10,023 கன அடியாகச் சரிந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1,250 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. அணையிலிருந்து திறக்கப்படும் நீரின் அளவைவிட அணைக்கு வரும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை காலை 87.01 அடியாக உயர்ந்தது. அணையின் நீர் இருப்பு 49.29 டி.எம்.சியாக இருந்தது. இந் நிலையில் செவ்வாய்க்கிழமை காலை முதல் டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுவதால், அணையின் நீர்மட்டமும் சரியத் தொடங்கும் என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## ஆரோக்கியமான நெல் சாகுபடிக்கு சாம்பல் சத்து அவசியம்: வேளாண்மைத் துறை

ஆரோக்கியமான நெல் சாகுபடிக்கு சாம்பல் சத்து மிகவும் அவசியம் என்று வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பெ.ஹரிதாஸ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

விவசாயத்தில் மகசூலைப் பெருக்குவதற்கு இயற்கை உரங்களின் உபயோகத்தினைவிட, ரசாயன உரங்களின் பயன்பாடு தற்போது அதிகமாக உள்ளது.

பயிருக்கு தழை, மணி மற்றும் சாம்பல் சத்துகள் இன்றியமையாதவை ஆகும். தழைச்சத்து பயிருக்கு வளர்ச்சியையும், மணிச்சத்து வேர் வளர்ச்சிக்கும், பூக்கள் மற்றும் மணிகள் உருவாகவும், சாம்பல் சத்து பயிரின் தண்டு உறுதி, வறட்சியினை தாங்கும் சக்தி மற்றும் நோய் எதிர்ப்பு தன்மையையும் வழங்குகின்றன. தற்போது வீரிய ஒட்டு உயர் விளைச்சல் ரகங்கள் அதிகளவில் உபயோகத்தில் உள்ள சூழலில் ரசாயன உரங்களின் தேவையும் அதிகமாக உள்ளது. தழைச் சத்துகளை மட்டும் அதிகளவில் உபயோகிப்பதனால் பயிரின் வளர்ச்சி அதிகரிக்கின்றது. இதனால் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. ரசாயன

உரங்களை விட விலை குறைவாக உள்ளதால், யூரியா உரம் விவசாயிகளால் பயிரின் தேவைக்கு அதிகமாக உபயோகிப்பது வழக்கத்தில் உள்ளது. மேலும் மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அளிக்கவல்ல ரசாயன உரங்களை பயிருக்கு அளிப்பதும் குறைவாக உள்ளது. பயிருக்கு தேவையான சத்துக்களை அளிக்கும் உரங்கள் சமச்சீர் அளவில் இல்லாமல் ஒன்று அல்லது இரண்டு சத்துகளை மட்டும் வழங்கும் உரங்களை இடுவதால் பூச்சி, நோய் தாக்குதல் ஏற்பட்டு பயிரின் ஆரோக்கியம் கெடுகிறது.

நெற்பயிரின் சீரான வளர்ச்சிக்கும், பூச்சி, நோய்க்கு எதிர்ப்பு தன்மையினை அளித்தும், வறட்சியினை தாங்கும் சக்தியினை அளித்தும், பதர் ஆகாமல் நிறைந்த நெல்மணிகள் உருவாகவும் சாம்பல் சத்து கொண்ட பொட்டாஷ் அடியுரமாகவும், மேலுரமாக யூரியாவுடன் பொட்டாஷ் கலந்தும் இடவேண்டியது மிகவும் அவசியம். விவசாயிகள் பயிருக்குத் தேவையான தழை, மணி மற்றும் சாம்பல் சத்துகளை தரவல்ல நேரடி உரங்களை சிபாரிசுப்படி இடவேண்டும். இல்லாவிடில் 3 சத்துகளையும் கொண்ட கூட்டு உரங்களை உபயோகிக்க வேண்டும். முன்னணி உர நிறுவனங்களின் தயாரிப்பான 15:15:15, 16:16:16 ஆகிய கூட்டு உரங்களை விவசாயிகள் பயிருக்கு இட வேண்டும்.

இதன் ஒவ்வொரு குருணையிலும் 3 விதமான சத்துக்களும் சீரான அளவில் இருப்பதால் பயிருக்கு தேவையான சத்துகள் குறைபாடு இல்லாமல் கிடைக்கிறது. மேலும், ரசாயன உரங்களை பயிருக்கு அளிப்பதானது, மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலும், பயிர் தேவையின் அடிப்படையிலும் அமைய வேண்டும். எனவே விவசாயிகள் தழை, மணி, சாம்பல் ஆகிய 3 சத்துகளும் கொண்ட ரசாயன உரங்களை அடியுரமாக இட்டு அதிக மகசூல் பெறலாம் என அதில் தெரிவித்துள்ளார்.

# குறைந்த நிலப்பரப்பில் பொங்கல் கரும்பு சாகுபடி



காரைக்காலில் குறைந்த நிலப்பரப்பில் பொங்கல் கரும்பு சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்கின்றனர். இந்தப் பயிருக்கான சாதகமான நிலம், ஊக்குவிப்பு முறைகளை புதுச்சேரி அரசின் வேளாண் துறை செய்ய முன்வரவேண்டுமென மாற்றுப் பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

காரைக்கால் மாவட்டத்தில் நெல் தவிர்த்து மாற்றுப் பயிராக பருத்தி, உளுந்து, பயறு ஆகியவை மட்டும் பயிர் செய்கின்றனர். தோட்டப் பயிர் சாகுபடி ஆங்காங்கே சில இடங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

குறிப்பாக, தமிழக கடைமடைப் பகுதியில் ஆலைக்கு அனுப்பப்படும் சர்க்கரைக் கரும்பு, பொங்கலுக்கான கரும்பு ஆகியவை போல காரைக்கால் பகுதியில் பயிரிடப்படுவதில்லை.

கடந்த 2, 3 ஆண்டுகளாக சில விவசாயிகள் மட்டும் காரைக்கால் பகுதியில் பொங்கல் கரும்பு பயிர் செய்து லாபமீட்டுகின்றனர். மற்ற விவசாயிகள் காவிரித் தண்ணீர், ஆழ்குழாய் தண்ணீரை பயன்படுத்தி நெல் பயிரிடுவது, இல்லையெனில் நிலத்தை தரிசாக வைத்திருப்பது என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளனர்.

புதுச்சேரி அரசின் வேளாண்துறை அமைச்சர் ஆர்.கமலக்கண்ணன், தரிசாக உள்ள நிலத்தில் கருவேல மரங்கள் வளர்ந்து, அவற்றை அகற்றி வழக்கம்போல் பயிர் செய்ய முன்வருவோருக்கு ஹெக்டேருக்கு ரூ.7 ஆயிரம் மானியம் தரப்படுமென சட்டப்பேரவையில் அறிவிப்பு செய்தார். இது தரிசாக நிலத்தை போட்டுள்ள விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நிலையில், காரைக்கால் மாவட்டம், திருநள்ளாறு கொம்யூன் சேத்தூர் கிராமத்தில் பொங்கல் கரும்பை விவசாயி லோகநாதன் என்பவர் பயிரிட்டுள்ளார்.

இவரது செயல்பாடு மற்ற விவசாயிகளுக்கு முன்னுதாரணமாக இருக்கும் நிலையில், இதனை வேளாண் துறை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென மாற்றுப் பயிர் செய்ய விரும்பும் விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

கரும்பு பயிர் சாகுபடி குறித்து லோகநாதன் கூறும்போது, பொங்கல் கரும்பு 9 மாத பயிராகும். ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் கரும்பு கனு ஊன்றப்படும். முன்கூட்டியே கனு விதை உற்பத்தி செய்யப்படும். நிலத்தில் 4 அடி அகலத்துக்கிடையே ஒவ்வொரு கன்றும் நடப்படும். கரும்பு பயிருக்கு செம்மண் கலந்த பகுதியாக நிலப்பரப்பு இருக்கவேண்டும். வாரம் ஒரு முறை தண்ணீர் மற்றும் நோய் தாக்காத வகையில் மருந்து தெளிக்கவேண்டும். 100 குழி நிலப்பரப்பில் கரும்பு பயிரிட்டால், ரூ.55 ஆயிரம் வரை செலவாகும். மார்கழி மாதத்தில் அறுவடை செய்யும்போது ரூ.1.20 லட்சம் வரை விற்கமுடியும். 7 அடி உயரத்தில் வளர்ந்த பிறகு அறுவடை செய்யப்படும். செலவு செய்த தொகைக்கு ஈடாக லாபத் தொகை கிடைக்கும். கண்காணிப்புக்கு தொழிலாளர்கள் தேவையிருக்கிறது. சொந்தமாகப் பார்த்துக்கொள்ளும்போது, லாபம் அதிகமாக ஈட்டமுடியும் என்றார்.

இதுகுறித்த விவரத்தை அறியும் மாற்றுப் பயிர் செய்யும் விவசாயிகள், கரும்பு போன்ற மாற்றுப் பயிர் செய்யக்கூடிய மண் பரிசோதனை செய்து விவசாயிக்கு தகவல் தரவேண்டும். குறிப்பிட்ட மாற்றுப் பயிர் செய்வதற்கான ஊக்கம் அரசுத் துறையால் செய்யவேண்டும். இது செய்யப்படும்பட்சத்தில், நெல் தவிர்த்து மாற்றுப் பயிர் சாகுபடியில் காரைக்கால் முன்னணியில் இருக்கும் என்கின்றனர்.

**மாறியாக வேண்டும்**

கடல்மட்டத்திலிருந்து ஐந்து மீட்டரிலுள்ள பழையாறு நாகப்பட்டினத்திலிருந்து 50 மீட்டரில் உள்ள கல்லணை வரையிலான காவிரி டெல்டா ஒரு வெப்ப மண்டலம்.

ஆனால் 200 மீட்டரில் உள்ள மேட்டூர் அணைக்கு மேலே உள்ள பிலிகுண்டு, கே.ஆர். சாகர், ஹாரங்கி, ஹேமாவதி, கபினி முதலிய அணைகள் 350 மீட்டரிலிருந்து 1,000 மீட்டருக்கும் மேலான உயரத்தில் இருக்கும் கர்நாடக பீடபூமியில் காவிரி டெல்டாவைவிட பல மடங்கிலான காற்றின் ஈரப்பதம் (Humidity) ஆண்டு முழுவதும் நிலவுவதால், அங்கு பருப்பு பயறு சிறுதானியங்களும் தோட்டக்கலைப் பயிர்களும் (All Rainfed Crops) விளைச்சலை வழங்கி வந்தன.

பருப்பு காய்கனிகள் சிறுதானியங்கள் விளைந்த மண்ணில் நெல் கரும்பு என்றால் அவற்றிற்குத் தண்ணீர் தேவை அதிகம். ஆதலால் கர்நாடக காவிரியில் பாசன நீர் பன்மடங்கு அதிகரித்துவிட்டது.

மரபு வழியில் நெல் விளையும் காவிரி டெல்டா நிலங்களில் எந்தப் பயிரும் இல்லாமல் தரிசாக கிடக்கின்றன. நஞ்சைப் பயிர்களைத் தவிர வேறு எந்தப் பயிறும் டெல்டாவில் பயிரிட இயலாது.

தற்போது குறுவைப் பருவம் தாண்டி விட்டது. தாளடி மற்றும் சம்பா பருவத்திற்கு மேட்டூரில் உள்ள 45-50 டி.எம்.சி. நீர் மண்ணை ஈரப்படுத்தக்கூட போதாது. ஈரப்படுத்தவே 100 டி.எம்.சி.க்குமேல் நீர் தேவைப்படும்.

காவிரி டெல்டா மாவட்ட ஊர்களில் வாழும் மக்களுக்கு விவசாய வேலை / உணவு இரண்டும் மிக மிக இன்றியமையாதவை. ஆனால் இரண்டுக்கும் இப்போதைய நிலையில் வாய்ப்பே கிடையாது.

வழக்கமாக குறுவைக்கு மேட்டூரிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டு டெல்டா முழுவதும் நீர் நிறைந்து நிற்கும். அப்போது பூமியின் மேல் பரப்பில் ஈரப்பதம் உருவாகும். அது வளிமண்டல மேகங்களைத் தொட்டுக் கவர்ந்து கோடையிலும் மழைப் பொழிவை ஊக்குவிக்கும்.

தற்போது அந்த ஈரப்பதத்திற்குத்தான் நிரந்தர பஞ்சமாக வந்து விட்டதே! இந்தப் பஞ்சம் வடகிழக்கு பருவமழைக் காலத்திலும் தொடருமோ என்கிற பதற்றம் தற்போது உண்டாகிறது.

ஆகவே, வேளாண் பருவ மண்டலங்களுக்கு ஏற்றவாறு, பயிரிடும் முறைகளை வரையறை செய்து அதன்படி காவிரி படுகை மாநிலங்களில் திட்டமிட வேண்டும் (According to the Agro Climatic Land Scape Soil Wise) என்று மத்திய அரசை வலியுறுத்துவதற்கு காவிரி ஆற்றுப் படுகைவாழ் விவசாயிகள் குழு ஒன்று பிரதமர்

மோடியை சந்திக்க வேண்டும். சட்டப் போராட்டங்கள் என்பது டெல்டா விவசாயிகளுக்கு நிரந்தரமான பலன் தராது.

அந்த சந்திப்பின்போது எக்காலத்திலும் எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தி வரக்கூடிய பயிர்வாரி முறை (Zonal Wise Crop Pattern) கோரிக்கையை விளக்கிக் கூறி, அதற்கு மத்திய சட்டம் ஒன்றை இயற்றுமாறு வலியுறுத்த வேண்டும். காவிரி நடுவர் மன்ற தீர்ப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள கர்நாடக காவிரி படுகை நீர் பாசன பரப்பு 11 லட்சம் ஏக்கருக்குமேல் 28 லட்சமாக உயர்த்தி, அதற்கு ஏற்றவாறு மாநில நிதியை வைத்தே பாசன வசதிகளை ஏற்கெனவே செய்து கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமலும் கண்டு கொள்ளாமலும் விட்டதாலேயே, கர்நாடகத்தில் கருத்தழிந்த மூர்க்கத்தனமான கலவரங்கள் இன்று முற்றி வரம்பு கடந்து விரிந்து நெருப்பைக் கக்கி விட்டன. இரண்டாவது தடவையாகவும் உச்சநீதிமன்றம் தலையிட்டு நீரைத் திறந்து விடும்படி உத்தரவிட்டுள்ளபோதிலும், பாசன முன்னுரிமை கொண்ட கடைமடை காவிரி டெல்டா பாசனத்திற்கு ஏதுவாக, கர்நாடக புதிய பாசன திட்ட அணைகளின் மதகுகளை திறந்தே வைத்திருக்க கர்நாடக அரசுக்கு, நாட்டை ஆளுகின்ற உயர் அதிகாரம் கொண்ட மத்திய அரசு உடனடியாய் உத்தரவிட வேண்டும். (According to the Helsing Law in lieu of internationaly ensured Riparian Rights of tail end farming). உபரி என்றால் வழிய விடுகிற மாநிலம். பற்றாக்குறை என்று வரும்போது தம்மிடம் இருப்பதை விடுவிப்பதைக் கடமையாகக் கொள்ளாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை மக்களுக்கு மத்திய அரசு இனியாவது விளக்க வேண்டும்.

தமிழ்நாட்டிலும் பயிர்வாரி முறைக்கு மாறும்படி விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்க வேண்டியது அவசியமாகிறது. அப்படிச் செய்யத் தவறியதால்தான், காவிரி ஆறு நெடுக கூட்டுறவு நீரேற்றுப் பாசன முறைகள் கட்டுப்பாடோ கண்காணிப்போ கூட இல்லாமல், 1972-லிருந்தே இயங்கிக் கொண்டுள்ளது. பயிர்வாரி முறைக்கு மாறும்படி உத்தரவிடாமல், அனைத்து விவசாய பம்பு செட்டுகளுக்கும் மின்சாரம் இலவசம் என்று அறிவிக்கப்பட்டதால், இன்று மோட்டார்களின் குதிரை சக்திக்கு வரம்பே இருப்பதில்லை. இதனால் ஜீவாதாரமாய் நெடுங்காலமாய் விளங்கி வந்த குடிமராமத்து என்பது காணாமல் போய்விட்டது. விவசாயிகளும் மறந்து விட்டனர். நிலத்தடி நீரும் வற்றி வறண்டுவிட்டது. காற்றில் ஈரப்பதம் அற்றதால் இயற்கையும் தண்டிக்கத் தொடங்கிவிட்டது. ஆறுகளில் நீரோட்டம் கிடையாது. ஏரிகள் வறண்டு

கிடக்கின்றன.
பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் இலவசம் என்கிற தற்கொலைத் திட்டம் கர்நாடகத்தில் கிடையாது. ஆனால் கர்நாடக மின்சார அலுவலகங்களில் மின்கட்டணம் செலுத்த சம்மதித்து விண்ணப்பித்து அங்கும் தற்போது காவிரிப் படுகைகளில் மின்மோட்டார்களின் எண்ணிக்கை நாளும் கூடிக்கொண்டே போகிறது.
இதனால் தமிழ்நாட்டைப்போல பயிர்வாரி முறை இல்லாததால் அங்கேயும் நிலத்தடி நீர் தாழ்ந்து தண்ணீர் தட்டுப்பாடு வந்து கொண்டுள்ளது. "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்று பதிவு செய்துள்ள சிலப்பதிகாரம் தோன்றிய தமிழகம், இந்தியாவுக்கே வழிகாட்ட வேண்டும்.

## மேகத்துக்கு ஒரு தூது!



"மேகமே மேகமே' "ஓடும் மேகங்களே' "மேகாரே மேகாரே' என்றெல்லாம் மேகத்தை வர்ணிக்குப் பாடாத கவிஞர்களே இல்லை. எல்லா மொழிகளிலும் மேகவர்ணனை உண்டு. தலைவி தலைவனுக்கு மேகத்தைத் தூது விட்டுத் தன் தனிமைத் துயரத்தை வெளிப்படுத்துவாள்.

மேகத்தைச் சுமக்கும் ஆகாயம் இந்திரனைக்குறிக்கும். வெல்ல முடியாத வீரக்கடவுளாக இந்திரனை நான்மறை போற்றுகிறது. இடி என்பது இந்திரனின் வீர கர்ஜனை. மின்னலே இந்திரனின் வஜ்ராயுதம். இப்படிப்பட்ட இந்திரனையே

வென்றதினால் இராவணனின் புதல்வனை இந்திரஜித்தன் என்று புகழ்ந்த வால்மீகி, அப்படிப்பட்ட இந்திரனையும் வெல்லக்கூடிய தெய்வமாக மாருதியை அதாவது அனுமனையும் ஒப்பிடத் தவறவில்லை.

மாருதி காற்றின் தெய்வம். மேகம் பெரிதா? காற்று பெரிதா? எது அதிக சக்தியுள்ளது? விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால் மேகத்தின் கருவே காற்றுதான். காற்றைப் பற்றி மகாகவி பாரதியார் இயற்றிய வசன கவிதைகளைப் படித்தவர்கள் அவருடைய வேதாப்பியாசத்தைக் கண்டு வியந்து மகிழ்வர்.

குறிப்பாக, மேகத்தைப் போற்றும் ரிக்வேத சாரமே அவை. காற்றை மேகத்தின் ஒரு கூறாகப்போற்றிய வைதீக விஞ்ஞான உண்மையையும் விண்டுரைக்கின்றார். ""காற்றைப் புகழ நம்மால் முடியாது

அவன் புகழ் தீராது.அவனை ரிஷிகள் "ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம' என்று போற்றுகிறார்கள்.

ப்ராண வாயுவைக் தொழுகின்றோம், அவன் நம்மைக்காத்திடுக. அபாநனைத் தொழுகின்றோம்.

அவன் நம்மைக் காக்க.

வ்யானனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க.

உதானனைத் தொழுகின்றோம்.

அவன் நம்மைக் காக்க.
ஸமானனைத் தொழுகின்றோம்.
அவன் நம்மைக் காக்க.
உயிரை வணங்குகின்றோம்

உயிர் வாழ்க. உயிரே, நினது

பெருமை யாருக்குத் தெரியும்?
நீ கண்கண்ட தெய்வம்.
எல்லா விதிகளும் நின்னால் அமைவன.
எல்லா விதிகளும் நின்னால் அழிவன.

உயிரே! நீ காற்று, நீ தீ, நீ நிலம், நீ நீர், நீ வானம்.
தோன்றும் பொருள்களின் தோற்ற நெறி நீ.
மாறுவனவற்றை மாற்றுவிப்பது

நின்தொழில்.

பறக்கின்ற பூச்சி, கொல்லுகின்ற புலி,

ஊர்கின்ற புழு,

இங்க பூமியிலுள்ள எண்ணற்ற உயிர்கள்,
எண்ணற்ற உலகங்களில் உள்ள
எண்ணேயில்லா உயிர்த்தொகைகள் -

இவையெல்லாம் நினது விளக்கம்".

இனி ஒரு சித்தர் பாடல் }

"காயமே இது பொய்யடா - வெறும்

காற்றடைக்க பையடா'.
இந்த உடல் காற்றடைத்த பை என்று பொருள். பாரதி எடுத்துக்காட்டியுள்ள

ப்ராணன், அபானன், வ்யானன் உதானன், சமானன் என்று ஐந்து
மூலக்காற்றையும் கொண்டதே இப்பூதவுடல்.
இந்த ஐந்து காற்றும் நம் உடலில் உள்ளது. நாம் உண்ணும் உணவு செரிமானமாகி ரத்தத்தில் சேர்ந்து விந்து சக்தியாகவும் உந்து சக்தியாகவும் மாறுகிறது என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால் பாரதி பிரபஞ்சத்தின் அம்சமாகவே இந்த ஐந்து பூதக்காற்றுகளை நோக்குகிறார்.

ஏனெனில், ஐம்பூதத் தத்துவத்தில் தான் மனித உடலில் உயிரியக்கம் நிகழ்கிறது. பிராணன் என்பது உயிர்க்காற்று ஆக்சிஜன். அபானன் என்பது கார்பன் - மீத்தேன் - நைட்ரஜன். மற்ற காற்றுகள் ஒளிக்கற்றைகளைக் குறிக்கும் சக்திகள்.
அன்று செய்தி சொல்ல மேகத்தை தூது அனுப்பியதாக புலவர்கள் காவியங்களைப் படைத்தார்கள். இன்று ஒலி அலைகளைத் திரட்டும் கோபுரங்களை வடிவமைத்து

2ஜி, 3ஜி என்றெல்லாம் பேசுகிறோம். இவற்றை இயக்குவது மேகமும் காற்றுமே. இன்று இந்தியாவிலிருந்து தொலைவில் உள்ள அமெரிக்காவுடன் கைபேசியில் பேசுகிறோம். காளிதாசனின் மேகவிடு தூது இன்று நிஜமாகிவிட்டது. வானியல் தத்துவத்தின்படி இந்த பூவுலகு ஒரு கோளம். அண்டவெளியில் சுற்றும்போது பூமியை மிதக்கவைக்கும் ஒரு சக்தியே நைட்ரஜன் என்ற அபானன்.
அந்த அபானனைத் தூய்மைப்படுத்துபவனே பிராணன் - அதாவது ஆக்சிஜன்.

குறிப்பாக, பாரதியார் கூறியபடி "ஒரு சதுர காற்று வரம்பில் லட்சக்கணக்கான

சிறிய ஜந்துக்கள் கண்ணுக்குத் தெரியாமல் வாழ்கின்றன' என்ற வாசகத்தில் வானியல் விஞ்ஞானமே அடங்கியுள்ளது.

"வானியல்' என்பது கோள்களைப் பற்றிய படிப்பு மட்டுமல்ல, இந்த பூமிக்கும்

வானத்திற்கும் உள்ள தொடர்பில் காணக்கூடிய மேகம், மழை, வெய்யில், குளிர், காற்று போன்ற ஆற்றல்கள் குறிக்க படிப்பும் ஆகும்.
ஆகாயத்தில் விண்வெளிக் கப்பல்களைப் பறக்கவிட்டு தொலை தூரத்தில் உள்ள சந்திரனையும் செவ்வாயையும் ஆராய்வது சரி. ஆனால் மண் மீது தாக்கம் ஏற்படுத்தும் மேகம், காற்று, மழை பற்றி நாம் இன்னம் முழுமையாக அறியவில்லை.
விஞ்ஞான அறிவின்படி பூமியின் மேற்பரப்பில் 40 சதவீதம் வெற்றிடம் என்றால் 60 சதவீதம் மேகமே ஆக்கிரமித்துக் கொண்டு மழை, வெண்பனி, புயல் ஆகியவற்றை உருவாக்கிய வண்ணம் உள்ளது.
சூரிய ஒளி உருவாக்கும் ஆற்றலையும் மேகம் கட்டுப்படுத்துகிறது. மேகத்தைப் பொருத்து சூரிய ஒளி ஆற்றல் (Solar Energy) வேறுபடும். நீர் சுழற்சியால் ஏற்படும் மழையையும் கட்டுப்படுத்துகிறது. நீர் சுழற்சிக்கும் சூரிய ஒளி ஆற்றலுக்கும் அடிப்படையான மேகத்தைப் புரிந்து கொண்டால்தான் புவியின் தட்பவெப்ப மாற்றத்தைப் புரிந்து கொள்ள முடியும்.
மேகத்தைச் சரியானபடி புரிந்து கொண்டால்தான் செயற்கை மழை வித்துக்களை வானில் விதைத்து மழை பெறவும் இயலும். ஆனால் மேகத்தைப் பற்றி மனிதன் புரிந்து கொண்டது மிகவும் குறைவு. மேக இயக்கத்தைப் புரிந்து கொண்டால் ஆண்டு தோறும் இடி மின்னலால் இறக்கும் மனிதர்களைக் காப்பாற்ற முடியும்.
மேகம் சமயங்களில் ஒரு குறுகிய பரப்பில் திரட்சியாகிறது. இவ்வாறு திரட்சியாகும் போது இடியாக வெடித்து மின்னலைக்கீழே இறக்குகிறது. இவ்வாறு பூமிக்குள் பாயும் இடி மின்னலால் கடந்த இருபது ஆண்டுகளில் 30,000 மக்கள் இந்தியாவில் மடிந்துள்ளனர்.
எந்தெந்த இடங்களில் அதிகப்படியாகக் குப்பைகளை எரிக்கிறார்களோ அங்கு இடி மின்னலைத் துரிதப்படுத்தும் போக்கு நிகழ்கிறது. அதிகபட்சம் அறுவடைக் கழிவுகளாகவுள்ள உதிர்ந்த மர இலைகள், கரும்புச் சோகை, வைக்கோல் போன்றவற்றை மக்க வைக்காமல் எரிப்பதும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது.
கடந்த ஆண்டு சென்னை நகரில் பெய்த இயல்புக்கு மீறிய மழையை நினைவு கொள்வோம். இதுவும் மாசு மிகுதியால் விளைந்ததே. இவ்வாறே மத்தியப் பிரதேசத்தில் சாத்னா மாவட்டத்தில் இரண்டே நாளில் 40 செ.மீ. மழை பெய்து வெள்ளக்காடானது. இந்த ஆண்டு கோடை மழை இந்தியாவில் பொய்தது போல் ஆகஸ்டு மாதம் வட மாநிலங்களிலும் வங்காளத்திலும், அசாமிலும் அபரிமிதமாக மழை வெள்ளம்.
வட இந்திய நதிகள் கரைபுரண்டு ஓடுகிறது. காவிரியில் நீர் இல்லை ஆனால் உலகில் பரவலாகப் பெய்ய வேண்டிய கோடை மழை சீனாவில் மட்டும் பெய்து

400 உயிர்களைப் பறித்துள்ளது. சுமார் ஒரு லட்சம் மக்கள் வீடு வாசல் இழந்துள்ளனர். இவ்வாறே அமெரிக்காவிலும் மாமழை பெய்துள்ளது. நிலம் கடல் நிலப்பரப்பு மாறுவது இல்லை.

பூமியில் ஏற்படும் உஷ்ணத்தால் கடல் நீர் ஆவியாகி, காடுகளில் உள்ள மரங்களின் பசுமை இலைகள் வழங்கும் உயிர்க்காற்றும் சேர்ந்து படியும் நீர்த்திவலைகளே கருமேகமாகி மழை பெய்வதாகக் கொண்டால் மழை உற்பத்தியில் மாற்றம் இல்லை. மாசுகள் இல்லாத வரை மழை ஒரே சீராகவும் பருவம் தவறாமலும், பரவலாகவும் பெய்யும்.

ஆனால் ஒரே இடத்தில் கொட்டித் தீர்த்தால் அம்மழை திசைமாறிப் போய்விட்டது என்பது பொருள். அதாவது, ஒரு இடத்தில் மட்டுமே அபரிமித மழை என்றால் பல இடங்களில் பெய்யாமல் வறட்சி ஏற்படும் என்பது பொருள்.

காற்று சக்திதான் மேகமாகத் தெரிகிறது. உண்மையில் மேகத்தின் கருவே காற்று. காற்றும் நீரும் கலந்த உருவே மேகம். கடலும், காடுகள் - மரங்கள் உள்ள பசுமை பூமியிலும் சூரிய சக்தியால் நீராவியாகி ஓசோன் உருவாகிறது. மேகம் என்பது வானத்தில் மிதக்கும் பனித்துகள்களே. இப்பனித்துகள்களின் கரு காற்றில் உள்ள அணுக்களே.

உயிர்ச் சக்தியுள்ள அபானனை மண்ணுக்குள் போற்றி மண்ணைப் பசுமையாக்கி அபானனைப் பிராணனாக மாற்றி விண்ணுக்கு வழங்கிவிட்டால் பருவத்தே மழை பொழியும். பூமியில் வெப்பம் குறையும். மனிதர்களின் பிழையால் அபானனைத் தூய்மைப்படுத்தாமல் அப்படியே மாசாக அனுப்பி மேகம் சிதைவதால் காலம் மாறிப் பெய்யும் மழை ஒரே இடத்தில் கொட்டித்தீர்த்தும் பல இடங்களில் வறட்சியையும் உருவாக்குகிறது.

பூமி மலர்ந்து குளிர மனிதர்கள் செய்ய வேண்டியது என்ன?

"மேகமே, மேகமே, எங்கள் பிழையைப் பொருத்தருள்க; நிலக்கரி வேண்டி, அனுமினியம் வேண்டி காட்டை அழிக்க மாட்டோம்; மாசு தரும் குளிர் சாதனங்களை மறந்து மின் விசிறியைப் பயன்படுத்துகிறோம்; கரிப்புகை தவிர்த்த வாகனங்களைப் பயன்படுத்துகிறோம்; மரங்களை நடுகிறோம்; மாசுகளை மரங்கள் கொண்டு நீக்கிவிட்டு நல்ல உயிர்க்காற்றை உனக்கு அனுப்புகிறோம்; மேகமே, எங்களைக் காப்பாற்று' என்று நமது பிரார்த்தனையை பிராணன் மூலம் மேகத்திற்கு தூதுவிட வேண்டும். தூது விடுவோமா? மறந்து விடுவோமா?

**பாம்பன் பகுதி மீனவர்களுக்கு அதிகம் கிடைத்த மாஉலா மீன்கள்**



பாம்பனில் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன்பிடிக்கச் சென்று திங்கள்கிழமை கரை திரும்பிய மீனவர்களுக்கு மாஉலா மீன்கள் அதிகமாக கிடைத்திருந்தன.

பாம்பன் பகுதியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை 68 படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர். இவர்கள் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன்களை பிடித்துக்கொண்டு திங்கள்கிழமை காலை கரை திரும்பினர். இதில், ஒவ்வொரு படகுகளுக்கும் மாஉலா என்று சொல்லக்கூடிய மீன்கள் தலா 100 கிலோ முதல் 150 கிலோ வரை கிடைத்திருந்தன.

இந்த மீன்களுக்கு வெளி நாடுகளில் அதிகமான வரவேற்பு இருக்கும். அதனால் ஒரு கிலோ மீனை ரூ. 150 முதல் 180 வரை வியாபாரிகள் வாங்கி சென்றனர். அதேபோல, செருப்பு கிளாத்தி மீன்கள், விளமீன்கள், பாறை மீன்கள், கணவாய் மீன்கள் உள்பட இதர மீன்களும் அதிகமாக கிடைத்திருந்தன. இதனால் அதிக லாபம் கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மேட்டூர் அணை இன்று திறப்பு: சம்பா உற்பத்தி அதிகரிக்க இலக்கு

தஞ்சாவூர்: 'பல்வேறு போராட்டங்களுக்கு பின், தமிழகத்திற்கு காவிரி நீர் கிடைத்துள்ளதால், நடப்பாண்டு, சம்பா சாகுபடி உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்' என, வேளாண் துறை அதிகாரிகளுக்கு, தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

போராட்டம் : ஆண்டுதோறும், ஜூன் 12ல், மேட்டூர் அணையில் நீர் திறக்கப்படும். இதன் மூலம், தஞ்சை, திருச்சி திருவாரூர், நாகை உள்ளிட்ட, 12 மாவட்டங்களில், 16 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். நடப்பாண்டு, காவிரி நீரை பெறுவதில், தமிழக அரசு சட்டரீதியாக போராடி, வெற்றி கண்டுள்ளது. கர்நாடகா அணைகளில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டதை தொடர்ந்து, மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதையடுத்து, சம்பா சாகுபடிக்காக, இன்று காலை, 8:00 மணிக்கு நீர் திறக்கப்படுகிறது.

இது குறித்து, வேளாண் அதிகாரிகள் கூறியதாவது: ஆண்டுதோறும், ஜூன் 12ல், மேட்டூர் அணை திறக்கப்பட்டு, குறுவை மற்றும் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்படும். நடப்பாண்டு காவிரி நீர் கிடைக்காததால், குறுவை சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டது.

அறிவுறுத்தல்: நடப்பாண்டு, 48 லட்சம் ஏக்கரில், 93 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்ய, தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. குறுவை பாதிக்கப்பட்ட நிலையில், சம்பா சாகுபடியால் தான், அரசின் உற்பத்தி இலக்கை எட்ட முடியும். நேரடி நெல் விதைப்பு, தேவையான உரம் மற்றும் தண்ணீர் பாசனம் ஆகியவற்றில், வேளாண்

அதிகாரிகள் அக்கறை காட்ட வேண்டும். சம்பா சாகுபடி உற்பத்தியை அதிகரித்து காட்ட வேண்டும். இதற்காக, மாவட்ட வேளாண் அதிகாரிகள், விவசாயிகளை சந்தித்து, அவர்களுக்கு தேவையான விழிப்புணர்வை வழங்க வேண்டும் என, தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வேளாண் நிலையத்தில் பயிற்சிகள் துவக்கம்

கோபி: கோபி வேளாண் அறிவியல் நிலையத்தில், பல்வேறு பயிற்சிகள் இன்று தொடங்குகின்றன. கோபி அருகே புதுவள்ளியம்பாளையத்தில், வேளாண் அறிவியல் நிலையம் இயங்கி வருகிறது. இங்கு தேனீ வளர்ப்பு தொழில் நுட்பம் குறித்த பயிற்சி, இன்று (??ம் தேதி) காலை துவங்குகிறது. இதேபோல், 27ம் தேதி காளான் வளர்ப்பு தொழில்நுட்பம் குறித்த பயிற்சி நடக்கிறது. இதில் பங்கு பெற விரும்புவோர், 23ம் தேதி முதல் தங்கள் விவரங்களை பதிவு செய்ய வேண்டும். இயற்கை வழி விவசாய தொழில்நுட்பம் குறித்த பயிற்சி, 28ம் தேதி நடக்கிறது. இதில் கலந்து கொள்வோர், 24ம் தேதி முதல் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சிகளில் கலந்து கொள்ள விரும்புவோர், இது தொடர்பான விவரங்களுக்கு, 04285-241626 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## விலையிருந்தும் விளைச்சல் இல்லை மழையை எதிர்பார்க்கும் விவசாயிகள்

கோத்தகிரி: கோத்தகிரியில் மழைப்பொய்த்துள்ள நிலையில், உருளைக்கிழங்கு தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாததால் பயிர்கள் வாட்டம் கண்டுள்ளன.

கோத்தகிரி பகுதியில், மழை பொய்த்துவிட்ட நிலையில், குளம், குட்டை, ஓடைகளில் தண்ணீர் அளவு குறைந்துவிட்டது. இதனால், விவசாயிகள் தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் திணறி வருகின்றனர். குறிப்பாக, பல இடங்களில் உருளை கிழங்கு விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. சில இடங்களில், ஓடையை ஆங்காங்கு தடுப்புகள் அமைத்து, அங்கு சேகரமாகும் தண்ணீரை, 'மோட்டார் பம்ப்' உதவியுடன் தோட்டங்களுக்கு பாய்ச்சி வருகின்றனர்.

தற்போது, மேட்டுப்பாளையம் மண்டிகளில், 45 கிலோ கொண்ட ஒரு மூட்டை, 900 ரூபாய் முதல், 1400 ரூபாய் வரை விற்கப்படுவதால், விவசாயிகள் கணிசமாக லாபம் அடைந்து

வருகின்றனர். அதேவேளையில், ஓரிரு வாரங்களில் அறுவடைக்கு தயாராகும் உருளைக்கிழங்கு பயிர்கள், நிறம் மாறி வருவதால், விளைச்சல் குறைவதற்கான வாய்ப்புள்ளது.

இதனால், விவசாயிகள், மழையை எதிர்பார்த்து காத்துக்கிடக்
கின்றனர்.

## பப்பாளி சாகுபடியில் விவசாயிகள்... ஆர்வம் மூன்று ஆண்டிற்கு பலன் கிடைக்கிறது

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகா பகுதியில் அதிக பரப்பில் பப்பாளி சாகுபடி செய்யப்படுகிறது. தொடர்ந்து மூன்று ஆண்டிற்கு பலன் கிடைப்பதால் விவசாயிகள் இதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
இத்தாலுகாவில் விவசாயிகள் குறுகிய கால காய்கறி பயிர்கள் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக தக்காளி, வெண்டை, கத்தரி மற்றும் வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக இப்பயிர்களுக்கு விலை கிடைக்கவில்லை. இதனால் செலவு செய்த பணத்தை கூட எடுக்க முடியாமல் வேதனையில் உள்ளனர்.
இந்நிலையில் பப்பாளி சாகுபடி செய்வது லாபகரமான தொழில் என்பதால் இதன் பரப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தோட்டக்கலைத்துறை சார்பில் பப்பாளி நாற்றுக்கு மானியம் தரப்படுகிறது. நடவு செய்த 3 மாதங்களில் இருந்து பலன் அறுவடை செய்யலாம். வைரஸ் போன்ற நோய் தாக்குதல் இல்லையெனில் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு பலன் கிடைக்கும். குறிப்பாக கோடையான ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் நல்ல விலை கிடைக்கும். 15 நாட்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். பெங்களூரு மற்றும் கேரள வியாபாரிகள் நேரடியாக வயல்வெளிகளுக்கு வந்து கொள்முதல் செய்கின்றனர். தற்போது ஒரு கிலோ ரூ. 6 முதல் ரூ. பத்து வரை விற்கப்படுகிறது.

சில்வார்பட்டி விவசாயி முத்துக்காமாட்சி கூறுகையில்,“விவசாய விளை பொருட்களை அறுவடை செய்து விற்பனைக்காக மார்க்கெட்டுகளுக்கு கொண்டு செல்ல வேண்டி உள்ளது.ஆனால் பப்பாளியை கொள்முதல் செய்ய வியாபாரிகள் நேரடியாக வயல்களுக்கு வருகின்றனர். நோய் தாக்குதல் இன்றி முறையாக

பராமரித்தால் மூன்று ஆண்டுகள் இதனால் பலன் கிடைக்கிறது. பொருளாதார இழப்பும் தவிர்க்கப்படுகிறது,"என்றார் இவ்வாறு கூறினார்.

## நவராத்திரி, தீபாவளி பண்டிகை: கொண்டக்கடலை, கடலை பருப்பு விலை உயர்வு

சேலம்: நவராத்திரி, தீபாவளி பண்டிகை நெருங்குவதால், கொண்டக்கடலை, கடலை பருப்பு விலை உயர்ந்துள்ளது.

வடமாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் பருப்பு, பயறு வகைகளின் வரத்து அதிகரித்ததால், ஜூலை, ஆகஸ்டில், உளுந்தம், துவரம், பாசி, கடலை பருப்பு, கொண்டக்கடலை, பொரி கடலை ஆகியவற்றின் விலை, வீழ்ச்சி ஏற்பட்டது. இதில், கிலோவுக்கு, 10 முதல், 80 ரூபாய் வரை, விலை சரிந்தது. வடமாநிலங்களில், நவம்பரில் பயறு வகைகளின் அறுவடை துவங்குவதால், பயறு, பருப்பு வகைகளின் விலையில், மேலும் சரிவு ஏற்படும் என, எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், விநாயகர் சதுர்த்தி முடிந்துள்ள நிலையில், அக்., 2ல் நவராத்திரி, அக்., 10 சரஸ்வதி மற்றும் ஆயுத பூஜை, அக்., 29 தீபாவளி கொண்டாடப்பட உள்ளதால், துவரம் பருப்பு, கடலை பருப்பு, கொண்டக்கடலை, பொட்டுக்கடலை, கடலை மாவு ஆகியவற்றின், தேவை அதிகரிக்கும். தற்போது அவற்றின் விலையில், குவிண்டாலுக்கு, 1,000 ரூபாய், கிலோவுக்கு, 10 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

சேலம் மாவட்ட மளிகை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் பெரியசாமி கூறியதாவது: சில மாதங்களாக, வரத்து அதிகரிப்பால், துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு, பாசி பருப்பு, கொண்டக்கடலை, கடலை பருப்பு ஆகியவற்றின் விலை சரிந்தது. விநாயகர் சதுர்த்தி முடிந்து, நவராத்திரி, சரஸ்வதி பூஜை, தீபாவளி பண்டிகை வரிசை கட்டுவதால், அவற்றின் தேவை அதிகரித்துள்ளதை காரணம் காட்டி, மொத்த வியாபாரிகள், நேற்று குவிண்டாலுக்கு, 1,000 ரூபாயும், கிலோவுக்கு, 10 ரூபாயும் விலை உயர்த்தியுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## மேட்டூர் அணையில் இன்று நீர்திறப்பு

மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து, டெல்டா பாசனத்துக்கு இன்று நீர்திறக்கப்படுகிறது. சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து டெல்டா சம்பா சாகுபடிக்கு, 'செப்., 20ம் தேதி நீர்திறக்கப்படும்' என, தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி, மேட்டூர் அணையில் இருந்து இன்று காலை, 8:00 மணிக்கு டெல்டா பாசனத்துக்கு நீர்திறக்கப்படுகிறது. இதில், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் இடைப்பாடி பழனிசாமி, மின்வாரியம் மற்றும் மதுவிலக்கு துறை அமைச்சர் தங்கமணி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கருப்பணன், சமூக நலத்துறை அமைச்சர் சரோஜா, போக்குவரத்து துறை அமைச்சர் விஜயபாஸ்கர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

## காளான் வளர்ப்பு: மாணவர்கள் விளக்கம்

பெத்தநாயக்கன்பாளையம்: பெத்தநாயக்கன்பாளையம் அருகே, பனமடலில், தனியார் வேளாண் கல்லூரி மாணவர்கள் சார்பில், விவசாயிகளுக்கு, காளான் வளர்ப்பு குறித்து, செயல்முறை விளக்க கூட்டம், நேற்று முன்தினம் நடந்தது. ஜீவா உழவர் மன்ற தலைவர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். இதில், காளான் படுக்கை தயாரித்தல்; விதையிலிருந்து காளான் அறுவடை வரை செய்ய வேண்டியவை; காளானில் இருந்து, எளிதில் செய்யக்கூடிய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு; அதை சந்தைப்படுத்துதல் குறித்து, விவசாயிகளின் சந்கேகங்களுக்கு, விளக்கம் அளிக்கப்பட்டது. இதில், 30க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

## மாவட்டத்தில் ரூ.45.75 கோடி விவசாய கடன் தள்ளுபடி

ராமநாதபுரம் : மாவட்டத்தில் ரூ.45.75 கோடி விவசாயக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டு அதற்கான சான்றிதழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் சிறு, குறு விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன், வேளாண் சார்ந்த மத்திய கால மற்றும் பண்ணை சார்ந்த நீண்ட கால கடன் தள்ளுபடி சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கலெக்டர் நடராஜன் தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் அலி அக்பர் முன்னிலை வகித்தார். மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ஜெகஜோதி வரவேற்றார்.

அன்வர் ராஜா எம்.பி., பேசுகையில்,' உணவு உற்பத்தியில் தமிழகம் உபரி அல்லது பற்றாக்குறை மாநிலமோ அல்ல. வினாடிக்கு 65 கன அடி தண்ணீரை திறந்து விடாததால் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டு தொகையை கர்நாடகா அரசு தரக்கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. காவிரி நீர் விவகாரத்தில் முதல்வர் ஜெ., உருவப்படம் கர்நாடகாவில் எரித்ததை கண்டிக்க தவறிய கட்சிகள் அரசியல் ஆதாயம் பார்க்கின்றனர்,' என்றார்.

முகாமில், 16,902 விவசாயிகளுக்கு ரூ.45.75 கோடி கடன் தள்ளுபடி சான்றிதழ் வழங்கி அமைச்சர் மணிகண்டன் பேசியதாவது:

தமிழகத்தில் 1.45 கோடி டன் அளவுக்கு உணவு உற்பத்திக்கு வழிவகுத்து பிற மாநிலங்களுக்கு உணவு வழங்கும் அளவுக்கு அ.தி.மு.க., ஆட்சியில் விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது. தி.மு.க., ஆட்சியில் ரூ.7,000 கோடி விவசாயக்கடன் தள்ளுபடி என அறிவித்து ரூ.3,800 கோடி தள்ளுபடி செய்தனர். முதல்வர் ஜெ., ரூ.5,860 கோடி விவசாயக்கடன் தள்ளுபடி செய்துள்ளார்' என்றார்.

எம்.எல்.ஏ., முத்தையா, மாவட்ட ஊராட்சி தலைவர் சுந்தரபாண்டியன் உள்பட பலர் பங்கேற்றனர். கூட்டுறவு சங்க இணை பதிவாளர் செந்தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.

## செப்., 26ல் தாவர பூச்சிகொல்லிகள் தயாரித்தல் குறித்த இலவச பயிற்சி

நாமக்கல்: 'வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 26ம் தேதி, 'தாவர பூச்சி கொல்லிகள் தயாரித்தல்' என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி நடக்கிறது' என, தலைவர் அகிலா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 26ம் தேதி, காலை, 9:00 மணிக்கு, 'தாவர பூச்சி கொல்லிகள் தயாரித்தல்' என்ற தலைப்பில், ஒருநாள் இலவச பயிற்சி நடக்கிறது. ஆடு, மாடு திண்ணாத இலைகள், பால்வடியும் தாவரங்கள் ஆகியவையுடன், பசுமாட்டு கோமியத்தை பயன்படுத்தி, பூச்சிவிரட்டி கரைசல்கள் தயாரித்தல் மற்றும் பூச்சி நோய்களை கட்டுப்படுத்துதல் குறித்து விளக்கப்படும். விருப்பம் உள்ளவர்கள், நாமக்கல் - மோகனூர் சாலை, கால்நடை மருத்துவ கல்லூரி வளாகத்தில்

செயல்படும், வேளாண் அறிவியல் நிலையத்தில் நேரிலோ, 04286 - 266 345, 266 650 என்ற எண்ணிலோ, வரும், 25ம் தேதிக்குள் முன்பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பற்றாக்குறையால் பஞ்சு விலை ரூ.51,000 ஆனது



கோவை: தென்னிந்திய பஞ்சாலைகளில் 29 என்.எம் கொண்ட பஞ்சு மூலம் பின்னலாடைக்கு தேவையான நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. இது குஜராத்தில் இருந்து வரவழைக்கப்படுகிறது. இந்த பஞ்சு, ஒரு கண்டி (355 கிலோ) விலை கடந்த ஏப்ரலில் ரூ.35 ஆயிரமாக இருந்தது. ஏற்றுமதி அதிகரிப்பு காரணமாக உள்நாட்டில் பற்றாக்குறை ஏற்பட்டு கடந்த ஜூலை வரையிலான 3 மாதத்தில் ரூ.54 ஆயிரம் வரை உயர்ந்தது. ஆகஸ்ட் மாதத்தில் படிப்படியாக ரூ.12 ஆயிரம்

குறைந்து ரூ.42 ஆயிரமானது. இந்நிலையில், மீண்டும் இம்மாதம் துவக்கம் முதல் பஞ்சு விலை உயரத்துவங்கியது. கடந்த 15 நாளில் படிப்படியாக ரூ.9 ஆயிரம் உயர்ந்து தற்போது ரூ.51 ஆயிரமாக உள்ளது. விலை மீண்டும் உயர்ந்து வருவதால் நூல் மில்கள் பாதிப்பிற்கு ஆளாகி வருகின்றன.

இதுகுறித்து இந்திய ஜவுளித்தொழில் கூட்டமைப்பு (டெக்ஸ்பிரனர்ஸ்) செயலாளர் பிரபு தாமோதரன் கூறியதாவது: நாட்டில் பஞ்சு இருப்பு, நடப்பு சீசனில் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இந்நிலையில், நாட்டின் வெளியுறவு கொள்கை காரணமாக ஏற்றுமதி தவிர்க்க முடியாததாகியுள்ளது. இதனால் ஏற்பட்ட பற்றாக்குறையால் விலையும் உயர்ந்துள்ளது. எனவே, மில்கள் தங்களுக்கு தேவையான பஞ்சை இறக்குமதி செய்து வருகின்றன. ஆனால், தேவையை காட்டிலும் வரத்து குறைவாக உள்ளதால், நாட்டில் பற்றாக்குறை அதிகரித்தவண்ணம் உள்ளது. இதனால், கடந்த 15 நாட்களாக பஞ்சு விலை மீண்டும் உயர தொடங்கியுள்ளது என்றார்.

**பாசன வாய்க்கால் சீரமைக்க உத்தரவு**

கோவை, : ேகாவை மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் வெள்ள தடுப்பு திட்டத்தை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. வாய்க்கால், சாக்கடைகளில் அடைப்பு இருந்தால் அவற்றை உடனடியாக சரி செய்யவேண்டும், தாழ்வான பகுதியில் உள்ள குடியிருப்பில் மழை நீர் தேங்க வாய்ப்பு இருந்தால் மணல் மூட்டைகளை குவித்து நீர் தேங்காமல் தடுக்கவேண்டும், தாழ்வான பகுதியில் தேங்கும் நீரை மோட்டார் பம்பு வைத்து வெளியேற்றவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி பகுதிகளில் வெள்ள அபாய பகுதிகளை கண்டறிந்து அங்கே பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். குளம், குட்டை, தடுப்பணைகளின் கரைகள், தாங்கு திறன்களை பொதுப்பணித்துறையினர் அடிக்கடி சோதிக்கவேண்டும். குளக்கரை குடியிருப்புகளுக்கு அபாய எச்சரிக்கை தரவேண்டும் என பொதுப்பணித்துறை நிர்வாகத்திற்கு, மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் 23ம் தேதி நடக்கிறது

நாகை : நாகை கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 23ம் தேதி நடக்கிறது. கலெக்டர் பழனிச்சாமி தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் நாகை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை தெரிவித்து பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

## உளுந்து சாகுபடியில் பயிர் பாதுகாப்பு

திண்டுக்கல் : உளுந்து சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டுமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர். நல்ல வடிகால் வசதியுள்ள அனைத்து நிலங்களிலும் உளுந்து சாகுபடி செய்யலாம். செப்டம்பர், அக்டோபர் காலங்களில் வம்பன் 2,3,4 மற்றும் ஏ.பி.கே.1 ஆகிய ரகங்களை பயிரிடலாம். ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் டி.எம்.வி.1 ரகத்தை பயிரிடலாம். பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வம்பன் 4 மற்றும் டி.எம்.வி.1 ரகத்தை பயிரிடலாம். ஹெக்டேருக்கு 20 கிலோ விதையை 30*10 சென்டிமீட்டர் இடைவெளியில் விதைக்க வேண்டும். விதைகளை துத்தநாக சல்பேட் 100 பிபி.எம் கரைசலில் 1 கிலோ விதைக்கு 1 லிட்டர் கரைசல் என்ற அளவில் 3 மணி நேரம் ஊர வைத்து விதைக்க வேண்டும்.

ஊறிய விதைகளை நிழலில் ஆரம்ப ஈர நிலை வரும் உலர வைத்து 1 மாதம் வரை உபயோகிக்கலாம். 1 ஹெக்டேருக்கு தேவையான விதையுடன் 2 பாக்கெட் ரைசோபியம் (பயிறு) உயிர் உரத்தை ஆறிய அரிசிக் கஞ்சியுடன் கலந்து 15 நிமிடம் நிழலில் உலர்த்தி 24 மணி நேரத்திற்குள் விதைக்க வேண்டும். 1 கிலோ விதைக்கு டிரைகோடெர்மாவிரிடி 4 கிராம் என்ற அளவில் கலந்து விதைக்க வேண்டும். 2 அல்லது 3 முறை நிலத்தை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். ஹெக்டருக்கு 12.5 மெட்ரிக் டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் கடைசி உழவுக்கு முன் இட்டு மண்ணுடன் கலக்க வேண்டும்.

மண் பரிசோதனை பரிந்துரைப்படி உர மிட வேண்டும். பொதுப்பரிந்துரையின்படி இறவை சாகுபடியாளர்கள் ஹெக்டேருக்கு 25 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்துக்கள் இட வேண்டும். மானாவாரி விவசாயிகள் ஹெக்டேருக்கு 12.5

கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச்சத்துக்கள் இட வேண்டும். மணிச்சத்தை ஊட்டமேற்றிய தொழு உரமாக இட வேண்டும். விதைக்கும் முன் கடைசி உழவில் பயறு நுண்ணுரம் ஹெக்டேருக்கு 5 கிலோ இட வேண்டும். விதைத்த 30 மற்றும் 45வது நாட்களில் 2% டி.ஏ.பி கரைசல் இட வேண்டும். பூக்கள் தோன்றும் ஒருமுறையும், 15 நாட்கள் கழித்து மறுமுறையும், என்.ஏ.ஏ 40 பிபிஎம் கரைசலை தெளிக்க வேண்டும்.

இரவையில் ஹெக்டேருக்கு 500 மில்லி புளூகுளோரலின் களைக்கொல்லியை 625 லிட்டர் நீரில் கலந்து விதைத்த 3ம் நாள் தெளித்து உடனடியாக நீர் பாய்ச்ச வேண்டும். பின், 25வது நாள் கைக்களை எடுக்க வேண்டும். மானாவாரி நிலங்களில் 20 மற்றும் 40வது நாளில் கைக்களை எடுக்க வேண்டும். உளுந்துக்கு மொத்தமாக 4 அல்லது 5 முறை நீர் பாய்ச்சினால் போதுமானது ஆகும். குறிப்பாக பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் பருவங்களில் வறட்சியை தவிர்க்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைபிடிக்க வேண்டுமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

### மண் மாதிரி எடுப்பது எப்படி? சொல்லி தர்றாங்க... வேளாண்துறை

பழநி : மண் பரிசோனைக்கு மண் எடுப்பது குறித்து வேளாண்துறையினர் கூறியுள்ளனர். இதுகுறித்து வேளாண்துறையினர் விடுத்துள்ள பத்திரிக்கை குறிப்பில் கூறியிருப்பதாவது: மண் மாதிரி ஆய்வுக்கு அரை கிலோ மண் கொடுத்தால் போதும். அந்த அரை கிலோ மண் குறிப்பிட்ட நிலத்திற்கு சரியான மாதிரியாக இருந்தால் தான் நிலத்தின் உண்மையான வளம் தெரியும். மண் மாதிரி எடுக்கும் போது ஒவ்வொரு முறை பயிர் செய்வதற்கு முன்பும் மண் பரிசோதனை செய்ய வேண்டும். ஒரு பயிர் அறுவடை செய்த பின்பும் இடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன்பும் உள்ள இடைபப்பட்ட காலத்தில் தான் மண் மாதிரி எடுக்க வேண்டும். ஒரு நிலத்தின் மண் வெவ்வேறாக இருந்தால் தனித் தனியாக மாதிரி எடுக்க வேண்டும்.

எரு குவித்த இடம், வரப்பு வாய்க்கால் அருகில் மற்றும் மர நிழலில் மாதிரி எடுக்கக் கூடாது. ஒவ்வொரு வயலுக்கும் தனித்தனியே மாதிரி எடுக்க வேண்டும். மண்மாதிரி எடுக்கப்படும் இடத்திலுள்ள இலை, சருகு, புல், ஆகியவைகளை மேல் மண்ணை செதுக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். நெல், கேழ்வரகு போன்ற தானியப்பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகளுக்கு அரை அடி

ஆழமும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறி பயிர்களுக்கு முக்கால் அடியும், தென்னைக்கு 3 அடியும், மா, சப்போட்டா போன்ற பழ மரங்களுக்கு 6 அடி ஆழத்தில் குழி வெட்டி அடுக்கு வாரியாக, தனித்தனியாக மண் மாதிரி எடுக்க வேண்டும்.

காலப்பயிர்களுக்கு ‘வி’ வடிவில் குழி வெட்ட வேண்டும். வெட்டிய குழியின் இரு ஓரங்களிலும் மண்வெட்டியின் தகட்டால் மேலிருந்து கீழ் வரை 1 சென்டி மீட்டர் கனத்திற்கு சீராக மண்ணை சுரண்டி எடுத்து சேகரிக்க வேண்டும். இதுபோல் 1 ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் மண் சேகரித்து அதை சுத்தமான பிளாஸ்டிக் பை அல்லது சாக்கில் கொட்டி, நன்றாக கலந்து கல், கண்ணாடி, வேர் தண்டுகளை அப்புறப்படுத்த வேண்டும்.

பின்பு, நான்கு சம போக முறையில் அரைகிலோ மண்ணை எடுத்து துணிப்பையில் போட்டு கட்ட வேண்டும். மண் மாதிரியுடன் விவசாயின் பெயர் மற்றும் அஞ்சல் முகவரி, கிராமத்தின் பெயர், நிலத்தின் பெயர், இறவை அல்லது மானாவாரி, பயிரிடப்பட்ட முன் பயிர் அடுத்து பயிரிடப் போகும் பயிர் பிரச்சனை இருப்பின் அதன் விபரங்களுடன் வேளாண்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.